

திருக்குறள் செம்மல் ந.மணிமொழியன்

# நிலைத்தது நிலையாமை!

இனிய நண்பர், திருக்குறள் செம்மல் மணிமொழியன் அவர்கள் திருக்குறள் ஆர்வலர், அவர் கலந்து உரையாடும் பொழுதும், பேசும் பொழுதும் திருக்குறளை இயைபுக்கு ஏற்ப எடுத்தாண்டே பேசுவார். நல்ல திருக்குறள் அறிஞர்; திருக்குறள் சொற்பொழிவாளர் *- தவத்திரு குன்றக்குடி அடிகளார்*

நிலைத்தது எது என்றால், நிலையாமையே என்று உணர்ந்து, மெய்யுணர்வு பெற்று என்றும் நிலைத்திருக்கும் செம்பொருளைப் பற்ற வேண்டும்

ஒவ்வொரு மனிதரும் இன்பத்தோடும், மகிழ்வோடும், அமைதியோடும் வாழவே விரும்புவர். ஆனால், வாழ்வில் இரவும், பகலும் போல இன்பமும் துன்பமும் இனணந்தே இருக்கும். நன்மையும் தீமையும் கலந்தே இருக்கும். ஒவ்வொரு நன்மையுடன் நிழல் போல் துன்பமும் தொடர்கின்றது. ஒவ்வொரு வெற்றியிலும் ஒரு தோல்வியும் நிழலாக நிற்கின்றது. ஆகவே வாழ்வில் இன்பமும் துன்பமும், நன்மையும் தீமையும், ஒளியும் இருளும் போல் இணைந்தே அமைந்திருக்கின்றன. நன்மைகள் மிகும்போது அதன் அளவிற்கு மறுபக்கமாகத் தீமைகள் வளர்ந்து வரும். இன்பங்களை மிகுதியாக அனுபவிக்கும் போது அதன் மறுபக்கம் துன்பங்களும் மிகுதியாகும்.

மனிதனுடைய அறிவு வளர்ச்சி மிகும்போது, விஞ்ஞான வளர்ச்சி மிகும்போது, அணு யுகம், கணிப்பொறி யுகம், இன்டர்நெட் யுகம் உருவாகும்போது ஆக்கம் பெருகும், அதற்கு இணையாக, மறுதலையாக சிக்கல்களும், அச்சமும், துயரங்களும், மிகுந்திருக்கும், விஞ்ஞான அறிவு வளரும்போது அறியாமை, மூட நம்பிக்கை, அச்சம் ஆகியவைகள் அழிக்கப்படுகின்றன என்பது உண்மை. ஆனால், அதற்கு இனணயாகத் தன்னலமும், தீமைகளும், துயரங்களும் உடன் இனணந்து நிற்கும். இன்ப நுகர்ச்சிகளை ஏற்றிச் செல்லும் நரம்புகளே துன்ப நுகர்ச்சிகளையும் ஏற்றிச் செல்கின்றன. ஒரே மனம்தான் இன்பத்தையும் துன்பத்தையும் இருவேறு நிலைகளில் உணர்கின்றது. நன்மை - தீமை, பிறப்பு-இறப்பு, இன்பம்-துன்பம், அறிவு-அறியாமை இவற்றின் கலப்பே உலக இயல்பு, நன்மையை மட்டும் பெற்று தீமையே இல்லாமல், இன்பத்தை மட்டும் பெற்று இல்லாமல், துன்பமே. வெற்றியை மட்டும் பெற்று தோல்வியே இல்லாமல், நட்பை மட்டும் பெற்று பகையே இல்லாமல் வாழ்வோம் என்பது இரவில்லாமல் பகலில் மட்டும் வாழ்கிறோம் என்று கூறும் அறியாமையை நிகர்க்கும். விஞ்ஞானம் அச்சத்தையும் மடமையையும், அறியாமையையும் அழித்து வளர்ச்சியையும், வளத்தையும், வசதிகளையும், சாதனைகளையும் உருவாக்கும் என்பது உண்மை. அதுபோல் இவ்விஞ்ஞானமே ஆபத்தையும், அழிவையும், அமைதியின்மையையும் உருவாக்கும் என்பதும் உண்மை. விஞ்ஞானத்தால் ஏற்படும் வளர்ச்சியோடு, முன்னேற்றத்தோடு இணைந்து நிற்கும் துன்பத்தை நீக்குவது எவ்வாறு?

1. இறைவன் ஆதிமுதல்வன், தூய பேரறிவாளன், அடியவர்களின் உள்ளத்தில் வசிப்பவன், வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன், பொறிவாயில் ஐந்தவித்தவன், பொய்தீர் ஒழுக்க நெறியுடையோர் தமக்கு ஒப்புவமை இல்லாத பேராற்றல் மிக்க அறவாழி அந்தணன்.



2. இறைவன் நமது மனமாகிய மலரில் வாழ்பவன் உலகில் வாழும் அனைவரும், அரசனாக இருந்தாலும், ஆண்டியாக இருந்தாலும், செல்வனாக இருந்தாலும், எளியவனாக இருந்தாலும், இன்பத்தோடு துன்பத்தை அனுபவித்தே வாழ முடியும். கவலையும் துன்பமும் நீங்கி வாழவேண்டுமானால், தனக்கு உவமை இல்லாத இறைவனது திருவடிகளைப் பற்றிச் சரணடைய வேண்டும் என்று திருவள்ளுவர் உறுதியாகக் கூறுகின்றார்.

**"தனக்குஉவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"**

புறப்பொருள்களை, சுகங்களை அனுபவிக்கும்போது இன்பத்தைப் போல் துன்பத்தையும் ஒரு சுவையாக ஏற்றுக்கொண்டு இனிப்புச் சுவையோடு, கசப்பையும் ஒரு சுவையாக ஏற்றுப் பழகிக் கொள்ள வேண்டும். மனம் இப்பக்குவம் பெறும்போது இன்பமும், துன்பமும் மனிதர்களைப் பாதிப்பதில்லை. இவர்கள் 'திருநின்ற சிந்தையராய்' இன்பத்தைக் கண்டு முழுவதும் மகிழ்ந்து விடாமலும், துன்பத்தைக் கண்டு முற்றிலும் துவண்டு விடாமலும், இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப் பாவித்து அமைதியுடன், நிறைவுடன் வாழ்வர்.

**"இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு"** (630)

புற இன்பங்களை, சுகங்களை அனுபவித்துக் கொண்டு அகத்திலே வீற்றிருக்கும் இறையாற்றலை உணர்ந்து, அகப்பொருளை மேலும் மேலும் போற்றி அன்பு செலுத்தும்போது, விரும்பும் போது, உடலால் வாழ்வது குறைந்து உள்ளத்தால் வாழ்வது அதிகமாகும்.

புலன் நுகர்ச்சிகளாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் இவற்றின் வகை தெரிந்து வாழும்போது உலகம் இவர்களுக்குக் கட்டுப்பட்டு நிற்கும். விண்ணுக்கு அப்பால், சுவர்க்கம், நரகம் உண்மையா, பொய்யா என்பதில் கருத்து வேறுபாடுகள் உண்டு. உண்மையாக இருக்கலாம். கற்பனையாகவும் இருக்கலாம். ஆனால், சுக அனுபவமாகிய சுவர்க்க, நரகத்தை நன்றாக ஒவ்வொருவரும் வாழும் காலத்திலே உணரமுடியும். உலகில் உள்ள நம்பிக்கைகளைப் பற்றிக் கவலைப்படாமல் உலகத்தை இயல்பான போக்கில் ஏற்றுக்கொண்டு, அத்துடன் கிடைக்கும் இன்பத்தை அனுபவித்து வாழ்வது ஒருமுறை.

இன்பத்தின் மறுபக்கமாகத் துன்பமும் தொடரும் என்று உணர்ந்து அதை எதிர்கொண்டு கவலைப்படாமல் உண்மையை மட்டும் நாடி முயல்வது மற்றொரு முறை. உண்மையை, சத்தியத்தை நாடிச் செல்லும் போது இனபம் - துன்பம், நன்மை - தீமை, மகிழ்ச்சி- கவலை, வாழ்வு - இறப்பு இவைகளின் உண்மையான நிலை புலப்படுகின்றது.

**"நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
கொள்கையான் ஆளப் படும்"**

எனத் திருவள்ளுவர் நன்மை - தீமை எதனால் ஆக்கப்படுகின்றதோ அதனை உணர்ந்து மெய்யுணர்வு பெற்று தீமையை அடக்கி நன்மையை நாட்ட முடியும் என்று வலியுறுத்துகின்றார்.

நிலைத்தது எது என்றால், நிலையாமையே என்று உணர்ந்து, மெய்யுணர்வு பெற்று என்றும் நிலைத்திருக்கும் செம்பொருளைப் பற்ற வேண்டும். செம்பொருளைப் பற்றி இடையறாத இன்பம் பெற வேண்டும் எனின், எல்லையில்லாத துன்பம் தருவதற்கு மூலகாரணமான எல்லையற்ற ஆசைகளை விட்டொழிக்க வேண்டும். அவ்வாறு வேண்டாமை என்ற விழுச்செல்வத்தைப் போற்றினால் துன்பங்கள், துயரங்கள் தீர்ந்து அருவியின் இடைவிடா நீர்வீழ்ச்சி போல் இன்பம் இடையறாது நிலைத்திருக்கும்.

**"இன்பம் இடையறாது ஈண்டும் அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்"** (369)

இத்தகையாரே உயிரோடு இருக்கும்போது உண்மையாக வாழ்பவர் ஆவர்; வாழும் போதே விடுதலை பெற்றவர் ஆவர். இவர்களே ஜீவன் முக்தர்கள் ஆவர். நம் நாட்டில் வாழ்ந்த பாம்பாட்டிச் சித்தரோடு கூடிய பதினெண் சித்தர்களும் வீடுபேறு பெற்றவர்கள். நச்சனைய பாம்பினையே ஆட்டுவித்த பேரறிவாளர் பாம்பாட்டிச் சித்தரும் நமக்குள்ளும் மூலாதாரமாகிய குண்டலினி சக்தியை எழுப்ப அருள் தருவார். ■